**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.113/2011 |
| Prosecution Witness | : | **அ.சா.3** |
| Name | : | **நூருல் ஹீதா பேகம்** |
| Father's/Husband Name: | : | அப்துல் ஜமீல் சாயபு |
| Address : | : | 116/66 கிழக்கு நடுத்தெரு, லப்பைக்குடிக்காடு, பெரம்பலூர் |
| Age | : | 70/2022 |

தேதி: 18/04/2022

**முதல் விசாரணை :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். ஆஜர் எதிரி நசீர் என்பவரை எனக்கு தெரியும். 1 மற்றும் 3-ம் எதிரிகள் இறந்துவிட்டனர். அவர்களையும் தெரியும். புகார்தாரர் எனது கணவர். எனக்கு 1966 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. அப்போது எனது மாமியார் மட்டும் தான் இருந்தார். எனது மாமனார் உயிருடன் இல்லை. எனது மாமனாருக்கு சொந்தமான 6 ஏக்கர் சொச்சம் உள்ள நிலத்தை எனது கணவரும், அவரின் உடன் பிறந்த சகோதரர் முகமது அலி சாய்பு என்பவரும் அனுபவித்து வந்தனர். முகமது அலி சாய்புக்கு சொந்தமான பாகத்தை 1985 ஆம் ஆண்டு அவரது சொந்த செலவிற்காக எங்களிடம் விற்றுவிட்டார். அதற்கு பின்பு மொத்த சொத்தும் எங்களின் அனுபவித்தில் தான் இருந்தது. அந்த நிலத்திற்குரிய வரிகளை நாங்கள் தான் செலுத்தி வந்தோம். எனது கொழுந்தனாரிடம் நிலத்தை

வாங்கிய பிறகு 3 முறை நாங்கள் சர்வேயரை வைத்து நிலத்தை அளந்து கல் போட்டோம். ஒவ்வொரு முறையும் அளந்து கல் போட்ட பிறகு பின்பு அந்த கல் காணாமல் போய்விடும். பின்பு 2010 ஆம் ஆண்டு வி.ஏ.ஓவிடமிருந்து என் கணவருக்கு போன் வந்தது. அதன் பின்னர் எனது கணவர் என்னை அழைத்து கொண்டு எறையூரில் உள்ள வி.ஏ.ஓ. அலுவலகத்திற்கு சென்றார். வி.ஏ.ஓ அலுவலகத்தில் எனது கணவரிடம் இடத்தை விற்கமாட்டேன் என கூறினீர்களே ஏன் விற்றீர்கள் என கேட்டார். அப்போது ஆஜர் எதிரியும் பிற எதிரிகளும் அங்கு இருந்தார்கள். அவர்களை காண்பித்து இவர்கள் தான் பட்டா மாற்றுவதற்காக வந்துள்ளார்கள் என்று கூறினார். அதன் பின்பு தான் எங்களுக்கு நில மோசடி நடந்தது தெரியவந்தது. அதன் பின்னர் வேப்பந்தட்டை பட்டா அலுவலகத்திற்கு எனது கணவர் சென்று, ஆவணங்களை பார்த்த போது, எனது கணவரின் பெயரை மாற்றி, ஆஜர் எதிரியின் தகப்பனார் பெயரை மாற்றியுள்ளார்கள். மேலும் எனது கணவரின் பெயரும், எதிரியின் தகப்பனார் பெயரும் அப்துல் ஜமீல் என்பதால் அதை தவறாக பயன்படுத்தி, நில மோசடி செய்துள்ளனர் என்ற விபரம் தெரியவந்தது. பின்னர் இது சம்மந்தமாக எனது கணவர் காவல் துறையில் புகார் கொடுத்தார். மேலும் இந்த நில மோசடி சம்மந்தமாக அரசு அதிகாரிகளும் தலையிட்டுள்ளார்கள் என்ற விபரம் தெரியவந்துள்ளது. இது சம்மந்தமாக காவல்துறையினர் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை :**

JUNOJUDIBLR

எதிரிக்கு போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும், குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

JM NO.I, PBLR

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

***Sd/-***

Judicial Magistrate No.I,

Perambalur.